## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

**O.S. No.**67/2016

2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 06 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் பி.சா.2 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 06.12.2024**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | ரதி | ஜாதி | : |
| க/பெயர் | : | தனியரசு | மதம் | : |
| கிராமம் | : | | தொழில் | : |
| வட்டம் | : | | வயது | : |

பி.சா. 2 முன்னிலை வாதி தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கு சம்மந்தமாக சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பட்டதா என்றால் இல்லை. பிரதிவாதி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு எவ்வளவு விஸ்தீரணத்துக்கு நடக்கிறது என்றால் 81 குழி ஆகும். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.1, 2ம் பிரதிவாதி சிலம்பரசனுக்கு என்னால் எழுதிகொடுக்கபட்ட கிரய அவணம் என்றால் சரிதான். இந்த பத்திரத்தில் புல ண்.199 AB/9Bல் பூரா புஞ்சை சாகுபடி நிலம் 0.09.5 ஏர்ஸ்க்கு செண்ட் 24 (72குழி) பட்டா எண்.484 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மீதமுள்ள 9 குழி வெண்ணிலை ஆவணமாக ஏற்படுத்தி கொடுத்துள்ளேன். எனது அப்பா எனக்கு கடந்த 22.09.2014 ம் தேதி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்திலும் இதே சொத்து விபரம் மற்றும் விஸ்தீரணத்தை குறிப்பிட்டு எழுதியுள்ளார் என்றால் சரியல்ல 81 குழி எழுதிகொடுத்துள்ளார். நான் 2ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்த 81 குழிக்கு பட்டா, அடங்கல், சிட்டா போன்ற ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது.

அந்த ஆவணங்களை எனது தரப்பில் நான் தாக்கல் செய்யவில்லை 2ம் பிரதிவாதி சிலம்பரசன் தரப்பில் தாக்கல் செய்துள்ளார். நான் தாவா சொத்தில் 9 குழியை வெண்ணிலை ஆவணமாக 2ம் பிரதிவாதிக்கு எழுதி

கொடுத்தபோது அதை பதிவு செய்தேனா என்றால் இல்லை. அந்த வெண்ணிலை பத்திரம் எந்த ஆண்டு எழுதப்பட்டது என்றால் 2015 ஆகும் ஆனால் சரியாக ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் வெண்ணிலை பத்திரம் என்னால் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 மற்றும் வெண்ணிலை பத்திரம் இரண்டும் ஒரே நாளில் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். உண்மையிலேயே 9 குழி நிலம் எனக்கு சொந்தமானதாக இருந்திருந்தால் இதையும் சேர்த்து 2ம் பிரதிவாதிக்கு பதிவு செய்து கொடுத்திருப்பேன் என்றால் சரயல்ல. 9 குழி நிலம் எனக்கு சொந்தமானதல்ல என்பதால் தான் வாதியிடமிருந்து தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காகதான் முன்தேதியிட்ட பத்திரம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

எனக்கு புல ண்.199 AB/9Bல் 0.09.5 ஏர்ஸ்க்கு செண்ட் 24 (72குழி) மட்டும் தான் சொந்தமானது என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா எனக்கு ஏற்படுத்தி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை என்னிடம் காண்பித்தால் அதில் எவ்வளவு விஸ்தீரணம் எனக்கு எழுதி கொடுக்கப்பட்டது என்பது குறித்து தெரியவரும் என்றால் சரிதான்.

(வாதி தரப்பில் பி.சா.2 க்கு அவரது தகப்பனார் எழுதிகொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் சான்றிட்ட நகலை பெற்று குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கோரியதன் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.12.09 12:47:47 +0530

District Munsif
Mannargudi.